டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 7.02.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 189 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் 800-க்கும் அதிகமான சுயஉதவி குழுக்கள் கடற்பாசி சாகுபடியை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன

புது தில்லி, பிப்.6

சிஎஸ்ஐஆர் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்ட கடற்பாசி திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 800-க்கும் அதிகமான சுயஉதவி குழுக்கள் கடற்பாசி சாகுபடியை தங்களின் வாழ்வாதாரமாக ஏற்றுக் கொண்டுள்ளன. கடற்பாசி ஆராய்ச்சி என்பது கூடுதல் வேலைவாய்ப்புகளையும் வருவாயையும் உருவாக்கும் ஒரு புதிய தொழிலை உருவாக்க வழிவகுத்துள்ளது. வணிகமய மாக்கலுக்காக கடற்பாசி தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு 12 நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. பல்வேறு திட்டங்களின் கீழ், குறிப்பாக தமிழ்நாடு, குஜராத், ஆந்திரப் பிரதேசத்தில் சுமார் 5000 மீனவர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பெண்கள் சுயஉதவி குழுக்கள் மூலம் கடற்பாசி சாகுபடியை ஊக்குவிக்க இலக்கு நிர்ணயித்து நிதி மற்றும் நிறுவன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மத்திய நிதியும், ஆதரவும் கடலோர சமூகங்களுக்குப் பயிற்சி, செயல்விளக்கங்கள் மற்றும் நேரடி உதவிக்காகப் பயன்படுத்தப்படுகிறது. மதிப்பு கூட்டல், உள்ளூர் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்கான ஆதரவும் இதில் அடங்கும்.

2030-க்குள் 1.12 மில்லியன் டன் கடற்பாசி உற்பத்தி இலக்கை அடைய, அரசு குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு உள்ளது. முதன்மையாக பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடற்பாசி துறையை மேம்படுத்துவதற்காக அரசு குறிப்பிடத்தக்க முதலீடுகளைச் செய்துள்ளது.

இதில் தமிழ்நாட்டில் பல்நோக்குக் கடற்பாசி பூங்கா, டாமன் மற்றும் டையூவில் கடற்பாசி வளர்க்கும் வங்கி போன்ற முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு ரூ.194.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சாகுபடி திறனை விரிவுபடுத்துவதற்காக, கடலோரப் பகுதிகளில் 46,095 கடற்பாசி மிதவைகள் மற்றும் 65,330 நீளமான குழாய் வலைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

கடற்பாசி உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மதிப்புத் தொடர்களை வலுப்படுத்த சிறு மற்றும் பெரிய நிறுவனங் களுக்கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதலாக, மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்டபம் மையம் கடற்பாசி சாகுபடிக்கான சிறந்த மையமாகவும், மத்திய அரசின் மீன்வளத் துறையால் கரு இனப்பெருக்க மையத்தை (NBC) நிறுவு வதற்கான ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது ஆராய்ச்சி, மேம்பட்ட வேளாண் நடைமுறைகள் மற்றும் விதை வங்கி மேம்பாட்டை ஆதரிப்ப தற்காகத் தொடங்கப்பட்டுள்ளது. இது 20,000-க்கும் அதிக மான விவசாயிகளுக்குப் பயனளிக்கும், 5,000-க்கும் அதிக மான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திறன் கொண்டது.

இந்தத் தகவலை மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங் 5.2.26 அன்று மாநிலங்களவையில் தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**






agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# முருங்கை கம்பளிப்புழுக்களைத் தீப்பந்தம் மூலம் அழித்தல் செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



திண்டுக்கல், பிப்.6

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, பள்ளபட்டி கிராமத்தில், மதுரை விவசாயக் கல்லூரியின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், முருங்கை மரங்களைத் தாக்கும் கம்பளிப் புழுக்களைத் தீப்பந்தம் கொண்டு அழிக்கும் நேரடிச் செயல்முறை விளக்கம் நடைபெற்றது.

**தீப்பந்தம் முறை (Flame Torch Method)**

முருங்கை மரங்களில் கூட்டமாகத் தங்கி சேதம் விளைவிக்கும் கம்பளிப்புழுக்களை ரசாயன மருந்துகள் இன்றி கட்டுப் படுத்துவது குறித்து வேளாண் மாணவி ஐஸ்வர்யா நாயர் விவசாயிகளுக்கு விளக்கினார். புழுக்கள் கூட்டமாக இருக்கும் பகுதிகளில் தீப்பந்தத்தைக் காட்டி, அவற்றை நேரடியாக எரித்து அழிக்கும் முறையை அவர் செய்து காட்டினார்.

**முக்கிய அம்சங்கள்**

முருங்கை இலைகளைச் சேதப்படுத்தும் கம்பளிப்புழுக்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, தீப்பந்தம் மூலம் அழிப் பதன் மூலம் புழுக்கள் பரவுவதைத் தடுக்கலாம். இது மிகவும் எளிய மற்றும் செலவில்லாத ஒரு இயற்கை பூச்சிக் கட்டுப்பாட்டு முறையாகும். இந்த முறையில் புழுக்களின் லார்வாக்கள் (Larvae) உடனடியாக அழிக்கப்படுவதால், பயிர் சேதம் பெருமளவு குறைகிறது. பள்ளபட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் இந்த எளிய முறையை ஆர்வத்துடன் கற்றுக் கொண்டனர். ரசாயனப் பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக இத்தகைய இயற்கை முறை களைப் பின்பற்றுவது மண்ணுக்கும் மனிதர்களுக்கும் நல்லது என இந்த நிகழ்வின் மூலம் வலியுறுத்தப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தர்பூசணியில் ஊசி மூலம் செயற்கை நிறமிகள் சேர்ப்பா?

# உண்மையல்ல என வேளாண்மை அறிவியல் நிலையம் தகவல்



சேலம், பிப்.6

சேலம் மாவட்டம், சங்ககிரி கோட்டத்திற்கு உட்பட்ட சங்ககிரி, இடைப்பாடி, கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளில் தர்பூசணியில் ஊசி மூலம் செயற்கை நிறமிகள் சேர்ப்பதாக சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

அதனையொட்டி, சேலம் மாவட்டம், சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயன் மற்றும் ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் வெங்கடாசலம் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு சங்ககிரி, கொங்கணாபுரம், எடப்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள தர்பூசணி விற்பனை கூடங்களுக்கு நேரில் சென்று எளிய பரிசோதனைகள் மூலம் கள ஆய்வு மேற்கொண்டனர். அவ்வாறு ஆய்வு மேற்கொண்டதில் தர்பூசணியில் எந்த ஒரு நிறமிகளும் கலக்கப்படவில்லை என்பதை உறுதி செய்தனர்.

இது குறித்து வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் விஜயன் கூறுகையில், தர்பூசணி விற்பனை கூடங்களுக்கு நேரில் சென்று, தர்பூசணியை சிறிய துண்டுகளாக நறுக்கி நீரில் போட்டு பார்த்தும், பஞ்சு மற்றும் டிஸ்யூ பேப்பர் கொண்டு எளிய பரிசோதனைகள் மூலம் ஆய்வு மேற்கொண்டதில் எந்த ஒரு நிறமிகளும் தர்பூசணியில் கலக்கப்படவில்லை என்பதை உறுதி செய்துள்ளோம்.

எனவே பொதுமக்கள் அனைவரும் வதந்திகளை நம்பாமல் கோடை காலத்திற்கு ஏற்ற பழமான தர்பூசணியை வாங்கி பயன்படுத்தலாம். அதன் நன்மைகளை பெறலாம் இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வின்போது, சந்தியூர் பூச்சியியல் இணை பேராசிரியர் ரவி, தோட்டக்கலை உதவி பேராசிரியர் முல்லை மாறன், ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய தோட்டக்கலை பேராசிரியர் வேல்முருகன், உழவியல் இணை பேராசிரியர் நடராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# போர்டோ கலவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்




நாமக்கல், பிப்.6

பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள், நாமக்கல் மாவட்டம், தீர்த்தாம்பாளையம் பகுதியில் உள்ள விவசாயிகளின் வயலில் போர்டோ கலவை (Bordeaux Paste) தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து செய்முறை விளக்கக் காட்சி நடத்தினர். போர்டோ கலவை (Bordeaux Paste) என்பது மரங்களின் தண்டு மற்றும் காயப்பகுதிகளில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு பூஞ்சைக் கொல்லி ஆகும். இது 10 லிட்டர் தண்ணீரில் 1 கிலோ காப்பர் சல்பேட் மற்றும் 1 கிலோ சுண்ணாம்பு கலந்து தயாரிக்கப்படுகிறது. மண்ணிலிருந்து பரவும் பூஞ்சை நோய்களைத் தடுக்கும் நோக்கில் மரத்தண்டுகளில் பூசப்படுகிறது.

இந்த செய்முறை விளக்கத்தில், போர்டோ கலவை தயாரிக்கும் முறை, அதன் முக்கியத்துவம், பயன்பாடுகள் மற்றும் பயிர்களில் பயன்படுத்த வேண்டிய சரியான முறைகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, பல்வேறு பயிர்களில் ஏற்படும் பூஞ்சை நோய்களை கட்டுப்படுத்த போர்டோ கலவை எவ்வாறு பயனுள்ளதாக செயல்படுகிறது என்பதையும், பயன்படுத்த வேண்டிய அளவு, நேரம் மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் குறித்தும் மாணவிகள் விரிவாக விளக்கம் அளித்தனர்.

இந்த செய்முறை விளக்கக் காட்சியை பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் மோனிகா சரவணன், மூகாம்பிகா சேகர், நர்மதா பாண்டிதுரை, பிரீத்தி ராஜா, ராஜலட்சுமி கிருஷ்ணமூர்த்தி, ரம்யா செந்தில்குமார் மற்றும் ரத்தினகுமாரி முருகன் ஆகியோர் இணைந்து நடத்தினர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள், மாணவிகள் வழங்கிய விளக்கங்களை ஆர்வத்துடன் கேட்டறிந்து பயன் பெற்றதுடன், இதுபோன்ற பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் எனக் கருத்து தெரிவித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அசோலா - மாற்றுத்தீவனம் - ஒரு பார்வை

தற்போது குறைந்த மழை அளவு உள்ளதாலும், விவசாய நிலங்கள் குறைந்து வருவதாலும், மாற்றுத்தீவனங்களைக் கால்நடைகளுக்குப் பயன்படுத்தினால் தீவனத் தட்டுப்பாட்டைக் குறைப்பதோடு தீவனச் செலவையும் குறைக்கலாம்.

அசோலா இரசாயன உரமில்லாத ஒரு மாற்றுத்தீவனமாக விளங்குவதால், அனைத்து வகைக் கால்நடைகளுக்கும் இது ஒரு சீரான தீவனமாக அமைகிறது.

கால்நடைத்தீவனத்தில் சேர்க்கப்படும் மக்காச்சோளம், கம்பு, சோளம் போன்ற தானிய வகைகள், பிண்ணாக்கு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றின் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வால் கால்நடை மற்றும் கோழித் தீவனச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

ஆகவே புரதச்சத்து மிகுந்த அசோலாவை கால்நடை மற்றும் கோழிகளுக்கு நிரந்தர மாற்றுத் தீவனமாகப் பயன் படுத்தி, உற்பத்திச்செலவினை கணிசமாகக் குறைக்கலாம். இது நெற் பயிருக்கு சிறந்த இயற்கை உரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**அசோலாவிலுள்ள சத்துகள்**

அசோலாவில் 25-30% புரதச்சத்து, 14-15% நார்ச்சத்து, 3-4% கொழுப்புச்சத்து, 45-50% மாவுச்சத்து, தாது உப்புகள் மற்றும் பல நுண்ணூட்டச் சத்துக்கள் உள்ளது.

**உற்பத்தி முறைகள்**

அதிக ஆழமில்லாத நீர் தேங்கும் குட்டைகள், நெல்வயல்/நெல் நாற்றங்கால், சிமெண்ட் தொட்டிகள், சில்பாலின் சீட் விரிக்கப்பட்ட குழிமுறை.

நெல் வயலில் அசோலாவை ஒரு சென்ட் நிலத்திற்கு ஒரு கிலோ என்ற விகிதத்தில் இட்டு சுமார் 5 செ.மீ. நீர் நிறுத்தினால், இரண்டு வார காலத்திற்குள் அந்த இடம் முழுவதும் வளர்ந்து விடும்.

## சிமெண்ட் தொட்டி முறை

10 அடி நீளம், 2 அடி அகலம், 1 அடி ஆழம் கொண்ட சிமெண்ட் தொட்டியில் 25-30 கிலோ மண்ணைப் பரப்பி அதனுடன் 5 கிலோ மக்கிய சாணத்தைக்கலந்து, அதனுடன் பாறைகளை உடைக்குமிடம் அல்லது ஆழ்குழாய்க் கிணறு போடுமிடம் ஆகியவற்றில் கிடைக்கும் மண் 100 கிராம் கலந்து கொள்ளவும். நீரின் அளவு 5 செ.மீ. இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இதில் 5 கிலோ அசோலாவை இட்டால் இரண்டு வாரங்களில் சுமார் 35-40 கிலோ அசோலாவை சேகரித்து எடுக்கலாம். 10 நாளுக்கு ஒருமுறை சாணக் கரைசலை ஊற்ற வேண்டும்.

## அசோலா ஒரு உயிர் உரம்

காற்றில் இருக்கும் தழைச்சத்தினைக் கிரகிக்கும் திறனுடையது. இதில் 4.5 சதவிகிதம் தழைச்சத்து உள்ளது. ஆகவே நெற் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ இடலாம். இதனால் பயிருக்கு தழைச்சத்து கிடைப்பதோடு 15-20% மகசூலும் உயர்கிறது.

## அசோலா ஒரு உயிர் உரம்

காற்றில் இருக்கும் தழைச்சத்தினைக் கிரகிக்கும் திறனுடையது. இதில் 4.5 சதவிகிதம் தழைச்சத்து உள்ளது. ஆகவே நெற் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ இடலாம். இதனால் பயிருக்கு தழைச்சத்து கிடைப்பதோடு 15-20% மகசூலும் உயர்கிறது.

## கால்நடைகளுக்கு தீவனமாக அளித்தல்

1 கிலோ அசோலா உற்பத்தி செய்ய 75 பைசா மட்டும் தான் செலவாகிறது. அசோலாவை பயன்படுத்தும் போது அடர் தீவனம் ஒரு பங்கு, அசோலா 1 பங்கு என்ற விகிதத்தில் கலந்து கொடுக்க வேண்டும்.

நன்கு பழக்கப்பட்ட பின்னர் கறவ மாடுகள் தனியாகவே அசோலாவை உட்கொள்ளும் ஒரு கிலோ புண்ணாக்கு ஒரு கிலோ அசோலாவுக்கு சமம். நாளொன்றிற்கு கறவை மாட்டிற்கு 1-1.5 கிலோ, வெண்பன்றிக்கு 1-1.5 கிலோ, ஆட்டிற்கு 300-500 கிராம், முயலுக்கு 100 கிராம், கோழி களுக்கு 25-30 கிராம் என்ற அளவில் அசோலா கொடுக்கலாம்.

கறவை மாடுகளில் பால் உற்பத்தி சுமார் 15-20% அதிகரிப்பதுடன், கொழுப்புச்சத்தும், கொழுப்பு அல்லாத திடப்பொருளின் அளவும் அதிகரிப்பதால் பாலின் தரமும் மேம்படுகின்றது. அசோலா உட்கொள்ளும் கோழிகளில் உடல் எடை அதிகமாவதுடன், முட்டையின் அளவும் அதிகரிக்கிறது. மேலும் முட்டையின் மஞ்சள் கரு அடர்ந்த நிறத்தில் காணப்படுகிறது.

எனவே ஒருங்கிணைந்த பண்ணையத்தில் அசோலா தயாரித்தல் வருமானம் தரக்கூடிய ஒன்று மட்டுமல்ல, சுற்றுச் சூழலையும் பாதுகாக்க உதவுகிறது.

மேலும் விபரங்களுக்கு, **செ.காயத்திரி இளங்கலை வேளாண் மாணவி, முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், முனைவர் இர.மகாலட்சுமி, குழு மேற் பார்வையாளர், பானுப்பிரியா, குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர். பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலை பேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# மஞ்சள் ஒட்டும் வலை பயன்பாடு குறித்த செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



நாமக்கல், பிப்6

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத் திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டம் கூடச்சேரி பகுதியில் கிராமப்பகுதிகளில் பயிர்களை தாக்கும் சப்பும் வகை பூச்சிகளான வெள்ளை ஈ, அஃபிட், த்ரிப்ஸ் போன்றவற்றை கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டும் வலை (Yellow Sticky Trap) பயன்பாடு குறித்த செயல்விளக்கம் நடத்தப்பட்டது.

இந்த முறையில் மஞ்சள் நிற அட்டையில் ஒட்டும் திரவம் பூசி வயலில் அமைக்கப்படுகிறது. மஞ்சள் நிறத்தால் ஈர்க்கப்படும் பூச்சிகள் இதில் ஒட்டிக் கொண்டு அழிகின்றன. இதனால் பூச்சி எண்ணிக்கை குறைந்து, ரசாயன மருந்துகளின் பயன்பாடு குறைகிறது.

ஒரு ஏக்கருக்கு 8-10 மஞ்சள் ஒட்டும் வலைகள் அமைக்க பரிந்துரைக்கப்பட்டது. இம்முறை குறைந்த செலவில், சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பானதாகவும், விவசாயிகளுக்கு பயன் உள்ளதாகவும் உள்ளது.




# மினி பால் பண்ணை அமைக்க என்ன செய்ய வேண்டும்?



தமிழகத்தில் மினி பால்பண்ணை அமைக்க (MINI DAIRY FARM SCHEME) அரசு மானியத்துடன் கால்நடை பராமரிப்பு துறையின் கீழ் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனுடைய விளைவாக தமிழகத்தில் பால் உற்பத்தி பெருக் கிடவும் சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர இத்திட்டம் வழிவகுக்கும். இதன் வாயிலாக மக்கள் கிராமங் களை விட்டு நகரங்களுக்கு குடியேறுவது தடுக்கப்படும். கிராமப்புறங்களும் செழிப்பாக இருக்கும். இதில் வங்கி கடனாக ஒவ்வொரு பயனாளிக்கு 5 லட்சம் கடனுதவி வழங்கப்படும். இதில் மானியமாக 25% அதாவது 1,25,000 வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாட்டு பண்ணை அமைக்க என்ன என்ன வசதிகள் இருக்க வேண்டும்.?**

1) குறைந்த பட்சமாக 300 சதுர அடி இடம் மாட்டு கொட்டகை அமைக்க இடம் வேண்டும்.

2) பால் மாடுகளுக்கு தேவையான தீவன புல் வளர்ப்பதற்கு நீர்ப்பாசன வசதியுடன் ஒரு ஏக்கர் நிலம் தேவை.

3) கால்நடைகள் வளர்ப்பில் ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும்.

**பயனாளிகளின் தகுதி?**

1) பயனாளிகள் அரசு பணி, கூட்டுறவு நிறுவனங்களில் பணியில் இருக்கக்கூடாது.

2) உள்ளாட்சி அமைப்புகளில் (LOGAL BODY) பிரதிநிதியாக இருக்க கூடாது.

3) பயனாளிகளின் உறவினர்கள் (கணவன், மனைவி, மகன், மருமகள், மகள், மருமகன்) அரசு பணியிலோ, கூட்டுறவு அமைப்புகளில் இருக்கக் கூடாது.

4) பயனாளிகள் கிராமத்தில் நிரந்தரமாக தங்கி இருப்பவராக இருக்க வேண்டும்.

5) பயனாளிகள் வங்கி கடன் மூலமாக இத்திட்டத்தினை செயல்படுத்திட விரும்பினால், அருகேயுள்ள வங்கி மேலாளரை அணுகி கடன் வழங்கிட ஒப்புதல் கடிதத்தினையும் ( PROVISIONAL LOAN SANCTION LETTER) பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பத்தை எப்படி? யாரிடம் விண்ணப்பிப்பது?**

உரிய ஆவணங்களுடன் ( பட்டா, சிட்டா, அடங்கலுடன்) 2 பாஸ்போட் சைஸ் புகைபடத்துடன் ஆதார் நகல், வங்கி கணக்கு எண், தொலைபேசி எண் உள்ளிட்ட அனைத்து நகல்களையும் விண்ணப்பத்துடன் இணைத்து அருகேயுள்ள கால்நடை மருத்துவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**தேர்வு குழு?**

சிறிய பால்பண்ணை அமைக்கும் விண்ணப்பதார்களிட மிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான தேர்வுகுழு (SELECTION COMMITTE) தலைமையில் உரிய பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். மாவட்ட குழுவின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

என்ன பால்பண்ணை லோன் போட தயாரா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு (PRA) மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, பிப்.6

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளங்கலை இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் (முதன் மோகன் ஜாதவ், மோகனபிரசாத்.சு, மோகித் குமார், நாக காமேஷ்.ஈ, பிருதிவிராஜ்.இரா, பிரவின்குமார்.சே.அ, ரஞ்சன் குமார் மற்றும் ரிதேஷ் படேஜா) தங்கள் இறுதியாண்டு பாடத்திட்டத்திற்காக கிராமப்புற அனுபவ பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் சரவணம்பட்டி கிராமத்தில் கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு (PRA) மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் அவர்களின் வேளாண்மை சார்ந்த தேவைகள், வளங்கள் மற்றும் முக்கிய பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வு களை கண்டறியும் நோக்கில் இந்த செயல்முறை மேற் கொள்ளப்பட்டது. நிகழ்வின் போது கிராம மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, தங்களது அனுபவங்கள் மற்றும் கருத்துகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்வின் ஒரு பகுதியாக பிரச்சனை மரம், முழு கிராமத்தின் வள மற்றும் சமூக வரைபடம், வட்ட வரைபடங்கள், பருவ கால நாட்காட்டி, பயண வரைபடம், தினசரி கால அட்டவணை மற்றும் ஆகியவை கிராம மக்கள் முன் விளக்கப்பட்டன. இதன் மூலம் சரவணம்பட்டி கிராம மக்கள் தங்களின் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் எதிர் காலத்தில் பயன்படுத்த வேண்டிய பல்வேறு தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# குறைந்த விதை – குறைந்த நீர் – அதிக மகசூல் தரும் திருத்திய நெல் சாகுபடி செயல்விளக்கம்



தேனி, பிப்.6

தேனி மாவட்டம், கம்பம் வட்டாரம், ஹனுமந்தன்பட்டி கிராமத்தில் நெல் பயிரில் அதிக மகசூல் மற்றும் வருமானம் பெறும் நோக்கில் SRI (System of Rice Intensification) முறையில் நெல் சாகுபடி குறித்து மதுரை வேளாண்மை கல்லூரி மாணவி ரா.மகாலட்சுமியால் களத்தில் நேரடி செய்முறை விளக்கம் நடத்தப்பட்டது.

**செய்முறை விளக்கம்**

● ஒரு ஹெக்டேர் நெல் சாகுபடிக்கு 7–8 கிலோ விதை மட்டுமே போதுமானது.

● நாற்றங்கால் பரப்பளவு ஒரு ஹெக்டேருக்கு 100 சதுர மீட்டர் ஆக குறைக்கப்படுகிறது.

● 14 நாட்கள் வயதுடைய (3 இலை நிலை) நாற்றுகள் நடவு செய்ய பரிந்துரைக்கப்படுகின்றன.

● சதுர நடவு இடைவெளி 25 X 25 செ.மீ ஆக நிர்ணயிக்கப்படுகிறது.

● மாற்று ஈரப்பதம் – உலர்த்தல் முறையில் பாசனம் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

● மண்ணில் சிறிய விரிசல்கள் தோன்றிய பிறகு, அதிகபட்சம் 2.5 செ.மீ ஆழம் வரை நீரை மீண்டும் பாசனம் செய்ய வேண்டும்.

● நடவு செய்த பிறகு 10, 20, 30 மற்றும் 40ஆம் நாட்களில் என மொத்தம் நான்கு முறை கோனோவீடர் மூலம் களை எடுப்பு செய்ய வேண்டும்.

● நைட்ரஜன் (N) உரம் அளவை இலை நிற அட்டை (Leaf Color Chart - LCC) மூலம் நிர்ணயிக்கலாம்.

**திருந்திய நெல் சாகுபடியின் நன்மைகள்**

பாரம்பரிய நெல் சாகுபடி முறைகளுடன் ஒப்பிடுகையில் விதை அளவு மிகவும் குறைவாக, சுமார் 10-20 சதவீதம் மட்டுமே தேவையாகிறது. அதேபோல், நீர் தேவையும் 35-40 சதவீதம் வரை குறைவதாகும். இந்த முறையில் ஒவ்வொரு நாற்றும் சராசரியாக 16 முதல் 22 வரை கொத்துகளை (panicles) உருவாக்குகிறது. SRI முறையில் ஒரு ஹெக்டேருக்கு சராசரி யாக 6.20 டன் நெல் மகசூல் கிடைக்க, பாரம்பரிய முறையில் 5.7 டன் மட்டுமே பெறப்படுகிறது.

மேலும், உற்பத்தி செலவு 10 முதல் 30 சதவீதம் வரை (மண்டலத்தைப் பொறுத்து) குறைவதாகும். இதன் விளைவாக, விவசாயிகளின் நிகர வருமானம் சராசரியாக 68 சதவீதம் வரை அதிகரிக்கிறது. இந்த செயல் விளக்கம், ஹனுமந்தன்பட்டி பகுதி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் இந்த முறையை ஆர்வமுடன் கவனித்து, தங்களது வயல்களில் SRI முறையை பின்பற்ற முன் வந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# எம் ஆர் டி தேனி பண்ணையை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, பிப்.6

திருச்சி மாவட்டம், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவிகள் எம் ஆர் டி தேனி பண்ணை நத்தம், தஞ்சாவூர் பார்வையிட்டு பலனடைந்தனர். தேனீ வளர்ப்பு (Apiculture) என்பது தேனீக்களை செயற்கை கூடுகளில் வளர்த்து, தேன், மெழுகு மற்றும் மகரந்தம் போன்றவற்றை அறுவடை செய்யும் ஒரு இலாபகரமான விவசாயம் சார்ந்த தொழிலாகும். தமிழ்நாட்டில், குறிப்பாக சிறிய நிலப்பரப்பு, மாடித் தோட்டம் அல்லது பண்ணைகளில், தேனீப் பெட்டிகள் மூலம், குறைந்த முதலீட்டில் நல்ல லாபம் பெறலாம். அவர் 300 மார்த்தாண்டம் தேனீ வளர்ப்பு பெட்டியில் இந்தியன் தேனீக்களை வெற்றி கரமாக வளர்த்து மாதம் ரூ.50,000 - ரூ.60,000 வரை வருமானம் ஈட்டிக் கொண்டு இருக்கிறார்.

**தேன் பண்ணை அமைப்பதற்கான முக்கிய குறிப்புகள்**

**தேனீ வகைகள்** : இந்தியாவில் Apis cerana indica (இந்தியத் தேனீ) மற்றும் Apis mellifera (இத்தாலியத் தேனீ) ஆகியவை வளர்ப்புக்கு சிறந்தவை.

**அமைவிடம் :** நிழலான, சுத்தமான மற்றும் அருகில் மலர்கள் கொண்ட தோட்டங்கள் அல்லது விவசாய நிலங்கள் அவசியம்.

**தேவைப்படும் கருவிகள்** : தேனீப் பெட்டி (Bee Hive), புகைப்பான் (Smoker), முகக்கவசம், கைகள் உறை (Gloves) மற்றும் தேன் பிரித்தெடுக்கும் கருவி (Honey Extractor).

**பராமரிப்பு**

ராணித் தேனீயை கண்காணித்தல், நோய்த் தொற்று மற்றும் எதிரிகளிடமிருந்து (எறும்பு, குளவி) கூட்டைப் பாதுகாத்தல், மற்றும் தேன் அறுவடை செய்தல்.

அங்கு தேனிகளைப் பற்றியும்,தேனி வளர்ப்பு முறையைப் பற்றியும் வேளாண் கல்லூரி மாணவிகள் தெரிந்து கொண்டு பயனடைந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# தென்னை மரங்களில் ஏற்படும் ஸ்டெம் ப்ளீடிங் நோயை கட்டுப்படுத்தும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.6

தேனி மாவட்டம், உத்தம பாளையம் வட்டம், சீப்பாலக்கோட்டை கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவி பா.கார்த்திகா, ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தென்னை மரங்களில் ஏற்படும் ஸ்டெம் ப்ளீடிங் (Stem Bleeding) நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சி மற்றும் செய்முறை விளக்கக் காட்சி நடத்தப்பட்டது.

இந்த பயிற்சியில், தென்னை மரத்தின் தண்டு பகுதியில் சுண்ணாம்பு கரைசலை வளையமாக (Limewash Banding) பூசுவதன் மூலம், நோய் ஏற்படுத்தும் பூஞ்சை கிருமிகள் பரவுவதைத் தடுக்க முடியும் என்றும், தண்டு பகுதியில் அதிக ஈரப்பதம் சேர்வதை குறைப்பதன் மூலம் ஸ்டெம் ப்ளீடிங் நோயின் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் குறைகிறது என்றும் விளக்கப்பட்டது. மேலும், சுண்ணாம்பு கரைசல் தயாரிக்கும் முறை, வளையம் இட வேண்டிய சரியான உயரம், பயன்படுத்த வேண்டிய சுண்ணாம்பு அளவு, பூச வேண்டிய காலகட்டம் மற்றும் கவனிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு எளிமையான முறையில் செய்முறை விளக்கமாகக் காட்டப்பட்டது.

இந்த முறையை விவசாயிகள் முறையாகப் பின்பற்றுவதன் மூலம், குறைந்த செலவில் தென்னையை நோய்களிலிருந்து பாதுகாத்து, மரங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, மகசூல் இழப்பைத் தவிர்க்க முடியும் என தெரிவிக்கப்பட்டது. இந்த பயிற்சி நிகழ்ச்சி தென்னை சாகுபடியில் நோய் மேலாண் மையை மேம்படுத்தும் வகையில் பயனுள்ளதாக அமைந்தது.

# திராட்சையில் பழ ஈ கட்டுப்பாடு – திராட்சைக்கான பழ ஈ பாட்டில் வலை செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



தேனி, பிப்.6

தேனி மாவட்டம், காமயகவுண்டன் பட்டி பகுதியில் உள்ள திராட்சை தோட்டங்களில் பழுக்கும் காலத்தில் அதிகமாக தாக்கம் ஏற்படுத்தும் பழ ஈ (Fruit fly) யை கட்டுப்படுத்த, திராட்சைக்கான பழ ஈ பாட்டில் வலை என்ற இயற்கை மற்றும் இரசாயனமில்லா வலை முறையைப் பயன்படுத்துவது குறித்து வேளாண்மை கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம் அளித்தனர்.

**பழ ஈ தாக்கத்தின் அறிகுறிகள்**

- பழத்தின் மேற்பரப்பில் சிறிய துளைகள் தோன்றுதல்.
- பழத்திலிருந்து சாறு வெளியேறுதல்.
- பழம் முன்கூட்டியே அழுகி உதிர்தல்.
- பழத்தின் தரம் மற்றும் சந்தை மதிப்பு குறைதல்.
- விளைச்சலில் கணிசமான இழப்பு ஏற்படுதல்.

**செயல் விளக்கம்**

திராட்சை தோட்டங்களில் பழ ஈ கட்டுப்பாட்டிற்கு திராட்சைக்கான பழ ஈ பாட்டில் வலை ஒரு எளிய மற்றும் குறைந்த செலவிலான முறையாகும்.

பழுத்த வாழைப்பழம் நன்கு நசுக்கி, அதில் வெல்லம் மற்றும் தண்ணீர் சேர்த்து கலவை தயாரிக்கப்பட்டது. இந்த கலவையை ஒரு பிளாஸ்டிக் பாட்டிலில் ஊற்றப்பட்டு, பாட்டிலின் மேற் பகுதியில் 2–3 சிறிய துளைகள் போடப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலின்படி, இந்த பாட்டில் வலைகள் திராட்சை கொடியின் நடுத்தர உயரத்தில், ஏக்கருக்கு 8–10 வலைகள் என்ற கணக்கில் தொங்க விடப்பட்டன. வாசனைக்கு ஈர்க்கப்பட்ட பழ ஈக்கள் பாட்டிலின் உள்ளே சென்று சிக்கிக் கொள்வது காணப்பட்டது.

**பழ ஈ பாட்டில் வலை பயன்பாட்டின் நன்மைகள்**

- இரசாயன பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாடு குறையும்.
- குறைந்த செலவில் எளிதாக தயாரித்து பயன்படுத்தலாம்.
- மனித உடலுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதுகாப்பானது.
- பழங்களில் மருந்து மீதமின்றி தரமான உற்பத்தி கிடைக்கும்.
- நிலையான மற்றும் இயற்கை பயிர் பாதுகாப்பு முறையாகும்.

இந்த செயல்விளக்கம், காமயகவுண்டன்பட்டி பகுதி திராட்சை விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த திராட்சைக்கான பழ ஈ பாட்டில் வலை முறை, திராட்சை பயிரில் பழ ஈ கட்டுப்பாட்டிற்கு ஒரு சிறந்த மாற்று தீர்வாக விவசாயிகளால் பாராட்டப்பட்டது.

## விவசாய விழிப்புணர்வு பேரணி நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



ராணிப்பேட்டை, பிப்.6

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி, டான் போஸ்கோ வேளாண் கல்லூரி சார்பில் விவசாயம் காப்போம், என்ற கருத்தை முன் வைத்து ஒரு விவசாய விழிப்புணர்வு பேரணி நெமிலி பகுதியில் நடைபெற்றது. இந்த பேரணியில் கல்லூரியின் RAWE மாணவிகள், உள்ளூர் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு, விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பேரணியின் முக்கிய நோக்கம், விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள், விவசாய நிலங்கள் குறைந்து வரும் நிலை மற்றும் நிலையான சாகுபடி முறைகளின் அவசியம் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைப்பதாகும். மாணவிகள் இயற்கை வேளாண், மண் ஆரோக்கிய பாதுகாப்பு, நீர் வள மேலாண்மை மற்றும் சுற்றுச் சூழல் நட்பு சாகுபடி முறைகள் குறித்து விளக்கினர். இந்த விழிப்புணர்வு பேரணி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், விவசாயத்தை பாதுகாக்கும் சமூகப் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்ற கருத்தை வலுப்படுத்தியது.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
Rithvik Pipe
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வேப்பெண்ணெய் கரைசல் குறித்த செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



திண்டுக்கல், பிப்.6

திண்டுக்கல் மாவட்டம், நிலக் கோட்டை ஒன்றியம், பள்ளபட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவியின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் விவசாயிகளுக்கான தொழில்நுட்ப விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் வேளாண் மாணவி ஐஸ்வர்யா நாயர், பருத்தி பயிரில் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் வேப்பெண்ணெய்ப் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விரிவான விளக்கம் மற்றும் செயல் முறை விளக்கமளித்தார்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

பூச்சிக் கட்டுப்பாடு : செடிகளில் காணப்படும் அசுவினி (Aphids), வெள்ளை ஈ (Whitefly), இலைப்பேன் (Thrips) மற்றும் சிலந்திப் பூச்சிகள் (Mites) போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளை இயற்கை முறையில் கட்டுப்படுத்துவது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

**கரைசல் தயாரிப்பு :** வேப்பெண்ணெயை நேரடியாகத் தெளிக்காமல், அதனை ஒட்டும் திரவம் அல்லது சோப்பு கரைசல் சேர்த்து எவ்வாறு தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என்பது குறித்து மாணவி செயல்முறை விளக்கம் அளித்தார்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு :** ரசாயன பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக வேப்பெண்ணெயைப் பயன்படுத்துவதால் மண் வளம் காக்கப்படுவதோடு, நன்மை செய்யும் பூச்சிகள் அழியாமல் பாதுகாக்கப்படும் என்றும் விவசாயிகளிடம் வலியுறுத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு முகாமில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டு, வேப்பெண்ணெய் கரைசலை எந்தெந்த நேரங்களில் தெளிக்க வேண்டும் என்பது குறித்த தங்களது சந்தேகங்களைக் கேட்டறிந்தனர்.

# வேளாண் கண்காட்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்


திருச்சி, பிப்.6

திருச்சி மாவட்டம், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் ஒரு வேளாண் கண்காட்சி நடத்தினர்.

இக்கண்காட்சியின் முக்கிய நோக்கம் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் நிலைத்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மை முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். கண்காட்சியில் மண்ணின் வளத்தை மேம்படுத்தும் உயிர் உரங்கள், பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் பச்சை உரங்கள், தென்னை மகசூலை உயர்த்தும் தென்னை டானிக் பூச்சி பொறிகள், பஞ்சகாவியங்கள் போன்ற முக்கிய வேளாண் உள்ளீடுகள் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றின் பயன்பாடுகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

மேலும், விவசாய தொழில்நுட்பங்களை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இரண்டு செயல்விளக்க மாதிரிகள் (Models) அமைக்கப்பட்டு, பயிர் வளர்ச்சி, ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் நிலைத்த வேளாண்மை தொடர்பான கருத்துகள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன.

இந்த கண்காட்சியை பார்வையிட்ட விவசாயிகள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உயிர் உரங்களின் பயன், இயற்கை வேளாண்மையின் அவசியம் மற்றும் நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாடு குறித்து பயனுள்ள தகவல்களை பெற்றனர். அறிவியல் அடிப்படையிலான வேளாண்மை முறைகளை புல நிலைகளில் நடைமுறைப்படுத்துவதற்கு இக்கண்காட்சி உறுதுணையாக அமைந்தது.



# செல்லப் பறவைகளுக்கான தீவன மேலாண்மை

வீட்டில் வளரும் செல்லப் பறவைகளுக்கு உணவளிப்பதில் மிகுந்த பொறுப்பும் கவனமும் தேவை. செல்லப் பறவைகளின் வயது, இனங்களுக்கு ஏற்ப உணவுப் பழக்கம் மாறுபடும். பொதுவாக நாம் வீடுகளில் செல்லப் பறவைகளாக வளர்க்கும் சில குறிப்பிட்டவைகளுக்காக தீவன முறைகளைப் பற்றி அறிவோமாக.



செல்லப் பறவைகளுக்கான உணவானது சரிவிகித அளவில் இருத்தல் அவசியம். குறிப்பாக தானிய வகைகள் 60-70 சதவீதமும், காய்கறிகள் மற்றும் பழ வகைகள் 20-30 மற்றும் எண்ணெய் வித்துக்கள் 10 சதவீதமும் இருத்தல் வேண்டும்.

**கிளி**

தானியங்கள் 50 முதல் 60 சதவீதமும், காய்கறிகள் 10லிருந்து 15 சதவீதமும், பழங்கள் 5லிருந்து 10 சதவீதமும், எண்ணெய் வித்துக்கள் 10லிருந்து 15 சதவீதமும் மற்றும் குறுணைகளை 10லிருந்து 20 சதவீதமும் கலந்த கலவையாக சேர்த்து அளிக்கலாம். பழங்களில் குறிப்பாக ஆப்பிள், திராட்சை (விதையில்லாமல்) மற்றும் காய்கறிகளில் கேரட் மற்றும் பீன்ஸ் ஆகியவற்றை கொடுக்கலாம்.

**காக்கடூ**

ராகி, பப்பாளி, ஸ்ட்ராபொர்ரி மற்றும் நெல்லிக்காய் ஆகிய வற்றுடன் 1/4 கிண்ணம் அளவு விதைகள் அல்லது தானியங்கள் மற்றும் 1/4 கிண்ணம் பழம் அல்லது காய்கறி ஆகியவற்றை கொடுக்கலாம்.

**புறா**

தானியங்கள் 50-60 சதவீதமும், பருப்பு வகைகள் 20-50 சதவீதமும், கனிமங்கள் 2-5 சதவீதமும், எண்ணெய்வித்து புண்ணாக்கு 10-50 சதவீதமும் மற்றும் கீரை வகைகளை 5 சதவீதமும் கலந்து கொக்கலாம்.

**பாரகீட் அல்லது படஜெரிகார்**

தானியங்கள 15-25 சதவீதமும், காய்கறிகள் 25 சதவீதமும், எண்ணெய் வித்துக்கள் 50-60 சதவீதமும் உணவில் கலந்து கொடுத்தல் வேண்டும்.

தீவன முறையில் அனைத்து வகை செல்லப் பறவைகளுக்கும் சிலவற்றை கடைபிடிக்கவேண்டும். அவை முறையே படிப் படியாக தானிய வகைகளை செல்லப் பறவைகளுக்கு அளித்தல் வேண்டும். தினமும் சுத்தமான தானியங்கள் மற்றும் பழ வகைகளை கொடுக்க வேண்டும்.

வாரம் ஒரு முறை தானிய வகைகளை அளிக்க வேண்டும். பறவைகள் சிறிது சிறிதாக தங்கள் உணவை எடுத்துக் கொள்ளும்.

எனவே நாள் முழுவதும் உணவு கிண்ணத்தில் இருக்கும் படி மற்றும் முக்கால் வாசி கிண்ணம் நிரம்ப இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். வெவ்வேறு விதங்களில் உணவளிக்க வேண்டும். மேலும் உணவின் மீது விதைகளை தூவி விட வேண்டும். இவ்வாறு செய்வதால் பறவைகள் உணவு எடுத்துக் கொள்ளும் திறன் அதிகரிக்கும்.

பறவைகளின் உடல் அளவுக்கு ஏற்றார் போல் உணவு வகை களை தயார் செய்தல் வேண்டும். அவக்கோடா, வெங்காயம், பூண்டு, சாக்லேட், கார வகை உணவுகள், டீ, காபி, பப்பாளி பழ விதைகள் ஆகியவற்றை அறவே அளிக்க கூடாது. ஏதேனும் உணவு முறையில் புதிய வகை உணவளித்தால் படிப்படியாக உணவில் சேர்க்க வேண்டும். ஏனெனில் பறவைகள் சில பல நாட்கள், வாரங்கள் மற்றும் மாதங்கள் கூட எடுத்துக் கொள்ளும். தானிய வகைகளை பொடியாக்கி காய்கறி வகைகளின் மீது தூவி கொடுக்கலாம். சுத்தமான குடிநீரை யளிக்க வேண்டும். தண்ணீர் மற்றும் தானியங்கள் அளித்த பாத்திரங்களை தினமும் கழுவ மற்றும் உலர வைக்க வேண்டும். குட்டிகுட்டியான விளையாட்டுப் பொருட்களை கூண்டினுள் வைத்தல் வேண்டும். பெரும்பாலும் அவை மர வகையில் இருந்தால் மிக நல்லது.

தகவல் : **முனைவர் மா.வெங்கடேசன், மரு.அ.ரேஷ்மா மற்றும் முனைவர் சிவராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112.**

